இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 318 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆனி 14 – சனிக்கிழமை 28 ஜூன் 2025 – திருச்சி ★★ 12 + 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 318: Thiruvalluvar Year - 2056 - Aani 14 - Saturday 28 June 2025 - Trichy ★★ 12+12 Pages ₹5.00


## ‘திராவிட மாடல்’ அரசு நித்தம் நித்தம் நிறைவேற்றும் திட்டங்கள் மூலம் அனைத்துத் தரப்பினரின் ஆதரவுடன்

# தமிழ்நாட்டை என்றைக்கும் நாம்தான் ஆளப் போகிறோம்!

## திருப்பத்தூர் அரசு விழாவில் நலத்திட்ட உதவிகளை வழங்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**திருப்பத்தூர், ஜூன் 28 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.6.2025) திருப்பத்தூர் மாவட்டம், மண்டலவாடியில் நடைபெற்ற அரசு விழாவில், முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, அரசு நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கி உரையாற்றுகையில், “ ‘திராவிட மாடல்’ அரசு நித்தம் நித்தம் நிறைவேற்றும் திட்டங்கள் மூலம் அனைத்துத் தரப்பினரின் ஆதரவுடன் தமிழ்நாட்டை என்றைக்கும் நாம்தான் ஆளப் போகிறோம்!” என்று உறுதிபடக் குறிப்பிட்டார்.**

முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

எழில் கொஞ்சும் ஏலகிரி - சவ்வாது மலை - நிலம் நனைக்கும், செய்யாறு - ஆரணி யாறு – ஒரு பக்கம், சந்தனம் மணக்கும் காடுகள் – இன்னொரு பக்கம் பசியைத் தூண்டக்கூடிய ஆம்பூர் பிரியாணி - இப்படி இத்தனைச் சிறப்புகளுக்கும் பெயர் பெற்ற மாவட்டம்தான், இந்த திருப்பத்தூர் மாவட்டம்! இத்தகைய சிறப்புக்குரிய மாவட்டத்தில், உங்கள் அன்பை நான் ஏற்றுக்கொண்டு இந்த சிறப்பான நிகழ்ச்சியில் பங்கெடுப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்!

தோல் தொழிற்சாலைகளின் ஏற்றுமதி மூலமாக வருவாயும் ஈட்டி வேலைவாய்ப்பும் அளிக்கும் இந்த திருப்பத்தூர் மாவட்டத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கி, நிறைவுற்ற பணிகளை திறந்து வைத்து புதிய பணிகளுக்கான அடிக்கல் நாட்டும் மாபெரும் விழாவாக இந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**மக்கள் வழங்கிய வரவேற்பில் மனம் நிறைந்திருக்கிறேன்!**

நேற்று, காட்பாடி இரயிலில் இறங்கி வந்ததிலிருந்து மக்களுடைய அதாவது உங்களுடைய வரவேற்பில் மனம் நிறைந்திருக்கிறேன்.

நம்முடைய மூத்த அமைச்சர் அண்ணன் துரைமுருகன் அவர்கள் இந்த ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்தின் தளகர்த்தர்! அவர் நெகிழ்ச்சியுடன் சொன்னார்: “இதுவரைக்கும் இந்தளவுக்கு கூட்டத்தை நான் பார்க்கவேயில்லை!” “நம்முடைய அரசு செய்திருப்பது போன்ற திட்டங்கள் இதுவரைக்கும் தமிழக வரலாற்றிலேயே நடைபெற்றது இல்லை” என்று பெருமையோடு சொன்னார்! அந்தளவுக்குத் திட்டங்களை செய்திருக்கிறோம்! செய்துகொண்டு இருக்கிறோம்! தொடர்ந்து செய்துகொண்டே இருப்போம்! அதனால்தான், நீங்கள் அன்பை வாரி வழங்கிக் கொண்டிருக்கிறீர்கள்!

### ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்தின் தளகர்த்தர் - அண்ணன் துரைமுருகன்!

**நம்முடைய மூத்த அமைச்சர் அண்ணன் துரைமுருகன் அவர்கள் இந்த ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்தின் தளகர்த்தர்! அவர் நெகிழ்ச்சியுடன் சொன்னார்: “இதுவரைக்கும் இந்தளவுக்கு கூட்டத்தை நான் பார்க்கவேயில்லை!” “நம்முடைய அரசு செய்திருப்பது போன்ற திட்டங்கள் இதுவரைக்கும் தமிழக வரலாற்றிலேயே நடைபெற்றது இல்லை” என்று பெருமையோடு சொன்னார்! அந்தளவுக்குத் திட்டங்களை செய்திருக்கிறோம்! செய்துகொண்டு இருக்கிறோம்! தொடர்ந்து செய்துகொண்டே இருப்போம்! அதனால்தான், நீங்கள் அன்பை வாரி வழங்கிக் கொண்டிருக்கிறீர்கள்!**

நேற்று மாலை 5 மணிக்கு வேலூரிலிருந்து நாங்கள் திருப்பத்தூருக்குப் புறப்பட்டோம். இந்த திருப்பத்தூருக்கு வந்து சேர ஆறு மணிநேரம் ஆனது! 5 மணிக்கு எங்களுடைய பயணம் தொடங்கி 11 மணிக்கு திருப்பத்தூரில் எங்களுடைய பயணம் முடிவடைந்தது. அந்த அளவுக்கு சாலையின் இருமருங்கிலும் கூட்டம் - கழகத் தோழர்கள் வரவேற்பது ஒரு பக்கம் – அதையும் தாண்டி பொதுமக்கள், இளைஞர்கள் தாய்மார்கள், மாணவர்கள், மாணவியர்கள், விவசாயிகள், தொழிலாளிகள் இப்படி பல்வேறு தரப்பட்ட மக்கள் தந்த வரவேற்பு. இந்த வரவேற்பைப் பார்க்கின்றபோது நான் கொஞ்சம் இறுமாப்போடு, பெருமையோடு தெரிவிக்க விரும்புவது என்னவென்று கேட்டால், 2026 மட்டுமல்ல, அது 2031-ஆக இருந்தாலும், 2036-ஆக இருந்தாலும் என்றைக்கும் நாம் தான் இந்த நாட்டை ஆளப்போகிறோம் என்பதற்கு அடையாளமாக மக்கள் தந்திருக்கக்கூடிய வரவேற்பு எடுத்துக்காட்டியிருக்கிறது.

**திருப்பத்தூர் மாவட்டத்தை சிறப்பாக வளர்த்தெடுத்திருக்கிறார் அமைச்சர் எ.வ.வேலு!**

குறிப்பாக இந்த மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர், நம்முடைய கலைஞர்தான் அடிக்கடி சொல்வார், ‘எதிலும் வல்லவரான’ எ.வ.வேலு அவர் சிறப்பாக ஒருங்கிணைத்து இந்த நிகழ்ச்சியை உருவாக்கியிருக்கிறார்! அவர் திருவண்ணாமலைக்காரராக இருந்தாலும், எங்கும் வல்லவராக – எப்போதும் வல்லவராக இருப்பவர்தான் அவர். அதனால்தான், இந்த திருப்பத்தூர் மாவட்டத்திற்கு, நாங்கள் பொறுப்பாளராக தலைமைக் கழகத்தின் சார்பில் நியமித்திருக்கிறோம்! தன்னுடைய பொறுப்பில் இருக்கும் துறையை மட்டுமல்ல, பொறுப்பு மாவட்டத்தையும் சிறப்பாக வளர்த்தெடுத்திருக்கிறார் அமைச்சர் வேலு அவர்கள்! அதேபோல, அவருக்குத் துணை நிற்கக்கூடிய இந்த மாவட்ட

**தொடர்ச்சி 3ஆம் பக்கம்**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.6.2025), திருப்பத்தூர் மாவட்டம், மண்டலவாடியில் நடைபெற்ற அரசு விழாவில், 174 கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில் 90 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 68 கோடியே 76 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 60 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த விழாவில், அமைச்சர்கள் துரைமுருகன், எ.வ.வேலு, ஆர்.காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் டி.எம்.கதிர்ஆனந்த், சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் க.தேவராஜி, ஏ.நல்லதம்பி, அ.செ.வில்வநாதன், திருமதி. அமுலு விஜயன், பொதுப்பணித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி க.சிவசௌந்திரவல்லி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திருப்பத்தூர் மாவட்டத்தில் ரூ.517 கோடி செலவில்

# 1,00,168 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்: முதல்வர் வழங்கினார்!

## புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி – முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்தார்!

**திருப்பத்தூர், ஜூன் 28 -**

**திருப்பத்தூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் ரூ.517 கோடி ரூபாய் செலவில், 90 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 60 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 1,00,168 பயனாளிகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

வேலூர் மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் அரசு விழாக்களில் கலந்து கொள்வதற்காக 25.6.2025 அன்று சென்னை, சென்ட்ரல் இரயில் நிலையத்திலிருந்து வேலூர் புறப்பட்டுச் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு காட்பாடி இரயில் நிலையத்தில், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

பின்னர், வேலூர், அரசு பென்ட்லேண்ட் மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்ற விழாவில், தரை மற்றும் ஏழு தளங்களுடன் 197 கோடியே 81 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அரசு வேலூர் பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை மற்றும் வேலூர் மாவட்டத்தில் 7 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 7 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான கூடுதல் கட்டடங்கள் மற்றும் 2 துணை சுகாதார நிலையங்களுக்கான புதிய கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, வேலூர் மாவட்ட வருவாய் வட்டங்களுக்குட்பட்ட கிராமங்களில் ஆட்சேபனையற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் வீடு கட்டி வசித்து வரும் நபர்களுக்கு ஒருமுறை சிறப்பு வரன்முறை திட்டத்தின் கீழ் மற்றும் பல்வேறு திட்டங்களின் கீழ், நிலங்களை வரன்முறை செய்து 21,776 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

பின்னர், வேலூர் மாவட்டம், பூதூரில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் கட்டப்பட்டுள்ள வீடுகளை முதல்வர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்து, பயனாளிகளிடம் கலந்துரையாடி, அவர்களது தேவைகள் குறித்து கேட்டறிந்தார்.

அதன் தொடர்ச்சியாக, நேற்று (26.6.2025) முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், திருப்பத்தூர் மாவட்டம், மண்டலவாடியில் நடைபெற்ற அரசு விழாவில், 174 கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில் 90 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 68 கோடியே 76 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 60 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 273 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை 1,00,168 பயனாளிகளுக்கு வழங்கினார்.

**திருப்பத்தூர் மாவட்டத்தில் திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற பணிகளின் விவரங்கள்**

**மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில்,** ஆம்பூர் மற்றும் வாணியம்பாடி அரசு மருத்துவமனைகளில் 47 கோடியே 94 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் புறநோயாளிகள் பிரிவுகள் மற்றும் ஐ.சி.யூ வார்டுகள், லேப், ஸ்கேன், மருந்தகம் மற்றும் எக்ஸ்ரே அறைகள், நாட்றம்பள்ளி அரசு மருத்துவமனையில் 2 கோடி ரூபாய் செலவில் புறநோயாளிகள் பிரிவு மற்றும் போதைப் பொருள் மறுவாழ்வு மையக் கட்டடம், திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் 2 கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவில் இரண்டாம் தளத்தில் மாவட்ட தொடக்க நிலை இடையீட்டுச் சேவைகள் மையக் கட்டடம் மற்றும் முதல் தளத்தில் மாவட்ட ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வகக் கட்டடம், ஜோலார்பேட்டையில் 1 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் ஆரம்ப சுகாதார நிலைய புதிய கூடுதல் கட்டடம் மற்றும் வட்டார ஆரம்ப சுகாதார நிலைய அலகு, வாணியம்பாடியில் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம், திருப்பத்தூரில் 30 இலட்சம் ரூபாய் செலவில் கிராமப்புற துணை சுகாதார நிலையம்;

**நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறை முகங்கள் துறை சார்பில்,** கன்னடிக்குப்பம் - அய்யனூர், வளையாம்பட்டு - வாணியம்பாடி மற்றும் ஜோலார்பேட்டை - சோமநாயக் கன்பட்டி ஆகிய இரயில் நிலையங்களுக்கு இடையே 89 கோடியே 73 இலட்சம் ரூபாய் செலவில் சாலை மேம்பாலங்கள்;

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில்,** மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடத்திற்கு 11 கோடியே 67 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாய் செலவில் அடிப்படை வசதிகளுடன் கூடுதல் கட்டடம்;

**தாட்கோ சார்பில்,** புதூர்நாடு, கீழூர் ஏகலைவா மாதிரி உண்டு உறைவிடப் பள்ளிக்கு 5 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் 136 மாணவியர்கள் தங்கும் விடுதிக் கட்டடம்;

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை சார்பில்,** புதூர்நாடு, நெல்லிவாசல்நாடு, காவேரிப்பட்டு, குனிச்சி, செவ்வாத்தூர் ஆகிய கிராமங்களில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளில் 1 கோடியே 80 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் செலவில் வகுப்பறைக் கட்டடங்கள், கோணப்பட்டு ஊராட்சியில் 30 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் செலவில் பஞ்சாயத்து அலுவலகக் கட்டடம், புதூர்நாடு ஊராட்சியில் 30 இலட்சம் ரூபாய் செலவில் துணை சுகாதார மையக் கட்டடம், சின்னமோட்டூர், குனிச்சி, பாலூர் ஆகிய இடங்களில் 50 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் புதிய அங்கன்வாடிக் கட்டடங்கள், சிக்கனாங்குப்பம், ஆதியூர், குரும்பகேரி, கத்தாரி ஆகிய இடங்களில் 47 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவில் புதிய நியாய விலைக் கடைகள், நாராயணபுரம் மற்றும் கொண்டகிந்தனப்பள்ளியில் 16 இலட்சம் ரூபாய் செலவில் பேருந்து நிறுத்தத்தில் புதிய பேருந்து நிழற்கூடம், அரங்கல்துருகம், கல்நார்சம்பட்டி, பந்தராப்பள்ளி ஜெயந்திபுரம் குடியிருப்பு, சிம்மனாபுதூர், செவ்வாத்தூர் ஆகிய இடங்களில் 37 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் புதிய பல்நோக்கு கட்டடங்கள், சௌடேகுப்பம், பெரியகண்ணாலபட்டி, செவ்வாத்தூர், குனிச்சி ஆகிய இடங்களில் 31 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய் செலவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்;

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பில்,** தாயலூர், நிலாவூர், மங்கலம் ஆகிய இடங்களில் 51 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாய் செலவில்

**தொடர்ச்சி 3ஆம் பக்கம்**